4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1981
(ஆ, இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ. டி. சோமசுந்தரம்: இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) பொது வக்ஃபுகள் (கால வரையறையை நீட்டித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொது வக்ஃபுகள் (கால வரையறையை நீட்டித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.